



# மனைப்பிரிவு வரைபடம்

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## தென்காசி மாவட்டம்.

### சங்கரன்கோவில் வட்டம்

### களப்பாகுளம் ஊராட்சி

### களப்பாகுளம் கிராமம் (திட்டமில்லாத பகுதி)

புல எண்கள்:83/2A, 83/3A – ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு: 1 : 100 இணையதள இணைப்பு எண்: 4GF115BI/2025/TCP

குறிப்பு:

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = | 8950.00 ச.மீ (2.21ஏக்கர்) |
| உத்தேச மனைப்பிரிவு சாலையின் பரப்பளவு | = | 2293.67 ச.மீ |
| கோரிய மனைகள் – 42 | | 6656.33 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் – 42 | | |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | | |
| நிலையிலுள்ள சாலை | | |

பொது ஒதுக்கீடுகள்:

1.களப்பாகுளம் ஊராட்சிக்கு தான பத்திர ஆவண எண்:2926/2025 நாள்:26.09.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

2.TNCDBR–2019 விதி 47 (6) – ன் படி OSR 10% பரப்பிற்கு ஈடான வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.53280 /-நாள்:02.10.2025 – ல் உரிய அரசு கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

(i) உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்கு பரப்பு = 2293.67 ச.மீ

(ii) A உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக ( PUBLIC PURPOSE ) ஒதுக்கீடு - 33.94 ச.மீ (0.51%)

(iii) B உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது உபயோக ( TANGEDCO ) ஒதுக்கீடு - 35.32 ச.மீ (0.53%)

கட்டிட வரம்பு – 7.20மீ அகல சாலைக்கு 1.50மீ

மூலை முடக்கு –7.20மீ மற்றும் 9.00மீ அகல சாலைக்கு 1.50மீ X 1.50மீ

நிபந்தனைகள்:

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 16.08.2003 –ன் படி நில உரிமம் குறித்து தலைவர், களப்பாகுளம் ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் சாலைகள் மூலை முடக்கு மற்றும் பொது உபயோகம் ஒதுக்கீடு பகுதியினை உள்ளாட்சிக்கு தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை எனவும், தலைவர், களப்பாகுளம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

4. அரசாணை நிலை எண் : 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 19 – 12 – 2020 – ன் படி தலைவர், களப்பாகுளம் ஊராட்சி அவர்கள் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டும்.

5. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைபிரிவு நுழைவு வாயிலில் 6 x 4 என்ற அளவிளான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்திராமாக நிறுத்தப்பட வேண்டும்.

6. இம்மனைபிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் தடுப்பு சுவர் எழுப்பக் கூடாது.

7. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இம்மனைப்பிரிவிற்கான அனுமதிக்கான ஆணையுடன் நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனைவாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

**ம.வ/ தெமாநஊஅ எண் –SWP/ 59 /2025** வ

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tenkasi
Date:2025.10.10 15:52:26

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Tenkasi
Date:2026.05.02 17:19:4

அளவர் / உதவி வரைவாளர் வரைவாளர் நிலை – III மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தென்காசி மாவட்டம்.